| | | |
|---|---|---|
| | கரூர்<br>மா.ஆ.நி.<br><br>Karur<br>D.R.B. | **கரூர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்**<br>**கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம்,**<br>**ஒருங்கிணைந்த கூட்டுறவு வளாகம்,**<br>**மாவட்ட காவல் அலுவலகம் பின்புறம்,**<br>**மாவட்டஆட்சித்தலைவர் அலுவலக வளாகம்**<br>**கரூர் மாவட்டம் – 639 007.** |

விளம்பர எண்: 02 2020 நாள்: 13.03.2020

## மறு அறிவிப்பு

கரூர் மாவட்டத்தில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டில் செயல்படும் கூட்டுறவு நிறுவனங்களில் காலியாகவுள்ள 41 உதவியாளர் / எழுத்தர் / மேற்பார்வையாளர்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்கான எழுத்துத் தேர்வு 14.6.2020 முற்பகல் 10.00மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை கரூர் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்தால் நடத்தப்படவுள்ளது. இத்தேர்விற்கு தகுதிபெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் **www.drbkarur.net** என்ற இணையதளம் வாயிலாக மட்டுமே (THROUGH ONLINE ONLY) 14.3.2020 முதல் 08.4.2020 அன்று பிற்பகல் 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

இத்தேர்விற்கான குறைந்தபட்ச கல்வித்தகுதி, கூட்டுறவு பயிற்சி, வயது வரம்பு, இடஒதுக்கீடு, இனசுழற்சி, தேர்விற்கான பாடத்திட்டம், தேர்வுக் கட்டணம், தேர்வு நடைபெறும் நாள் மற்றும் பிற விவரங்களுக்கு கரூர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தின் **www.drbkarur.net** என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள விரிவான அறிவிக்கையை காணவும்.

இப்பணியிடங்களுக்கு ஏற்கனவே வெளியிடப்பட்ட விளம்பர எண்.01/2019இன் படி கரூர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திற்கு (06.8.2019 முதல் 10.9.2019 வரை) விண்ணப்பக் கட்டணம் செலுத்தி விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பித்தால் மட்டுமே அவர்களது விண்ணப்பம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். ஏற்கனவே இப்பணியிடங்களுக்கு விண்ணப்பக் கட்டணம் செலுத்தி விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பக் கட்டணம் செலுத்த தேவையில்லை. அவர்கள் விண்ணப்பக் கட்டண ரசீது எண்ணை மீண்டும் ஒருமுறை பயன்படுத்தி விண்ணப்பிக்கலாம். அவர்களது பழைய விண்ணப்பம் எக்காரணத்தைக் கொண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. அவர்கள் மீண்டும் விண்ணப்பிக்காவிட்டால் ஏற்கனவே செலுத்திய பணம் திருப்பி அளிக்கப்படமாட்டாது.

**இணைப்பதிவாளர் / தலைவர்,**
மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்,
கரூர்.